(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 387/2019 அ.சா.10

Name : **திரு.** டாக்டர்**.** ஜெயக்குமார்

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2026.

**( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் மூளை தண்டுவட நரம்பியல் அறுவை சிகிச்சை பிரிவில் மூத்த உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.07.2019ம் தேதியன்று காலை 05.30 மணியளவில் மதுரை அவனியாபுரம் செம்பூரணி ரோட்டைச் சேர்ந்த கணேசன் என்பவரது மகன் 25 வயது நிரம்பிய வினோத்குமார் என்பவர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அவசர பிரிவின் வாயிலாக தலைக்காயம் சிகிச்சை பிரிவு வார்டில் 101 ல் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அப்போது அவரது தாயார் சின்னப்பேச்சி கூறியதாவது காயம்பட்டவரை அடையாளம் தெரியாத ஒரு நபர் நள்ளிரவு 01.00 மணியளவில் தாக்கியதாக கூறினார். மேலும் சம்பவம் பற்றிய விவரம் தெளிவாக தெரியாது எனவும் கூறினார். அதிகாலையில் நோயாளியின் உணரல் சத்தம் கேட்டு அவரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாக கூறினார். நோயாளியை பரிசோதித்து பார்த்தபோது அவர் சுயநினைவின்றி காணப்பட்டார். அவரது நாடித்துடிப்பு மற்றும் இரத்த அழுத்தம் மிகவும் குறைவாக இருந்தது. அவரது மூளையின் செயல்பாடு மிகவும் குறைவாக இருந்தது. நோயாளியின் இடது காதின் வழியாக மூளை நீர் கசிந்து கொண்டிருந்தது. மேலும் நோயாளிக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. நெற்றியில் 2 தையலிடப்பட்ட காயங்கள் காணப்பட்டன.

i) 8 செ.மீ நீளம் மற்றொன்று 5 செ.மீ நீளம்.

2. மேல் உதட்டில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது.

அதன்பின் மூளைக்கான CT Scan எடுத்து பார்த்தபோது மூளையின் வலதுபக்கவாட்டில் இரத்தக் கசிவு மற்றும் இரத்த உறைவு காணப்பட்டது. வலதுபக்க மண்டையோட்டில் எலும்பு நொறுங்கி காணப்பட்டது. மூளையின் மையப்பகுதியான Brain Stem எனப்படும் பகுதியில் இரத்தக்கட்டு காணப்பட்டது. மூளை வீக்கமாக காணப்பட்டது. மேற்கண்ட காயங்களுக்கு முதலுதவி அளித்தும், தீவிர சிகிச்சை பிரிவில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. கடந்த 13.07.2019ம் தேதியன்று காலை 11.55 மணியளவில் நோயாளி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**</u>

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் இறந்துபோன நபருடைய சிகிச்சை குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த சங்கதிகளின் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

<u>**மறு விசாரணை –**</u> இல்லை.

Sd/– டாக்டர். ஜெயக்குமார்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.14 19:14:26 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.